## பிரதேச அபிவிருத்தி வங்கி - 2018

---

### 1.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் (“வங்கி”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**விடயத்தின் முக்கியத்துவம்**

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்காமல் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைக்கப்பட வேண்டும் என்ற 2016 ஆம் ஆண்டின் அரசாங்க பாதீட்டு முன்மொழிவிற்கு இணங்க லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியின் 100 சதவீத உரிமை பங்கினை வங்கி கொள்வனவு செய்தது என்ற நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல 22.2 இற்கு தங்கள் கவனத்தை நான் ஈர்க்கின்றேன். பிரதேச அபிவிருத்தி வங்கி லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியின் முழு பங்குகளையும் ரூபா. 4.176 பில்லியனுக்கு வாங்கியதுடன் கொள்வனவானது 31 திசெம்பர் 2018 நடைமுறைக்கு வரக்கூடியதாக புதிய பங்கு வழங்கல் முறை மூலம் பொது திறைசேரிக்கு இணங்க தீர்க்கப்பட்டது. இருப்பினும், லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியின் புத்தகங்களில் பங்கு ரத்து அல்லது புதிய பங்கு வழங்கல் இடம்பெறாததுடன் 31 திசெம்பர் 2018 இல் மொத்த பங்குதாரர் நிதி ரூபா. 5.386 பில்லியன் ஆகும். மேற்கூறிய முதலீடு பிரதேச அபிவிருத்தி வங்கியின் துணைநிறுவனமாக இருக்க தகுதி பெறாததடன் கட்டுப்படுத்தும் அதிகாரத்தினை வங்கி கொண்டிருக்கவில்லை, மற்றும் இது பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலின்படி நிதி அமைச்சிடமே உள்ளது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**முக்கியமான கணக்காய்வு விடயங்கள்**

நடைமுறை காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் எனது கணக்காய்வில் அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக காணப்பட்டவைகள் எனது உயர்தொழில் தீர்வுகளுக்குட்பட்ட விடயங்களாக காணப்படுகின்றதுடன், முக்கியமான கணக்காய்வு விடயங்களாகவும் காணப்படுகின்றது. நிதிக்கூற்றுக்களின் எனது கணக்காய்வின் உள்ளடக்கங்களில் குறிப்பிடப்பட்ட அந்த விடயங்கள் முழுமையானதொன்றாகக் காணப்படுகின்றதுடன் அதன் மீது எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை தாபிக்கையில் அந்த விடயங்களின் மீது தனியானதொரு அபிப்பிராயமொன்றையும் நான் வழங்கவில்லை.

கீழே உள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் கணக்காய்வு விடயம் எனது கணக்காய்வில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பது பற்றிய எனது விளக்கம் அமைப்பில் வழங்கப்படுகின்றது.

| **முக்கியமான கணக்காய்வு விடயம்** | **முக்கியமான கணக்காய்வு விடயம் எனது கணக்காய்வில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது** |
| --- | --- |
| எஸ்எல்எப்ஆர்எஸ் 9 இற்கான வங்கியின் மாற்றுதல்கள் உள்ளடங்கலாக கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான நட்டக்கழிவு படி:<br><br>ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவு படி முக்கிய கணக்காய்வு விடயமொன்றாக எனது கணக்காய்வில் கருதப்படுகின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களுக்காக (மற்றும் அவற்றின் நட்டக்கழிவு படி) அறிக்கையிடப்பட்ட தொகைகளின் பொருண்மைத்தன்மை, இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதிசார் கருவிகள் (எஸ்எல்எப்ஆர்எஸ் 9) இற்கு ஆதரவளித்துள்ள முகாமைத்துவத்தின் நட்ட மதிப்பீடுகளுடன் தொடர்புடைய உள்ளடக்கங்கள் மற்றும் மாற்றுதல்கள் முக்கிய கணக்காய்வு விடயமொன்றாக அதனை கருத்திற்கொள்வதற்கு எனது அடிப்படையாகக் காணப்படுகின்றது.<br><br>2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான, வங்கியின் அதன் மொத்தச் சொத்துக்களின் 75 சதவீதம், ரூபா. 133,433 மில்லியன் தொகையான ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளையும் (குறிப்பு - 20) தேறிய நட்டக்கழிவு ரூபா. 1,410 மில்லியனையும் (குறிப்பு-10) உள்ளடக்கியிருந்தது. வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மீதான எஸ்எல்எப்ஆர்எஸ் 9 இற்கான மாற்றுதல்கள் மீதான தாக்கம் அளவீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் 4 ஆம் குறிப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவு படிகளின் மதிப்பீடு சிக்கல் தன்மையான கைகளிலான கணிப்பீடுகளினை உள்ளடக்கியிருந்தது. அவ்வாறான கணிப்பீடுகளில் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள், நட்டக்கழிவு படிக்கான அதன் உணர்திறன் மற்றும் அடிப்படை குறிப்பு 3.1.1.7 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. | நட்டக்கழிவு படிகளின் நியமத்தன்மையை மதிப்பிடுவதற்கு, போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு ஆவணங்களினால் பெற்றுக்கொள்வதற்கு வடிவமைக்கப்பட்டுக் காணப்பட்ட (ஏனையவற்றுக்கிடையே) எனது கணக்காய்வு நடைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.<br><br>• கணக்காய்வு குழுச் சபை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட நட்டக்கழிவுக் கொள்கைகளின் மேற்பார்வை, மீளாய்வு மற்றும் அங்கீகார மட்ட மதிப்பீட்டினை உள்ளடக்கியிருந்த, ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளின் நட்டங்களின் மதிப்பீட்டின் மீதான கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, அமுல்படுத்தல் மற்றும் செயற்பாட்டு விளைத்திறமைகளினை நான் மதிப்பிட்டிருந்தேன்.<br>• அடிப்படை கணிப்பீடுகள் மற்றும் தரவினை நான் மாதிரி பரீட்சித்தேன்.<br>• மேற்குறிப்பிட்டதற்கும் மேலதிகமாக, பின்வரும் கவனஞ்செலுத்தப்பட்ட நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டன.<br><br>ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவிற்கான தனிப்பட்ட மதிப்பீடு.<br><br>• நட்டக்கழிவு நிகழ்வொன்று ஏற்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட பிரதான கட்டளை விதிகளினை நான் மதிப்பிட்டேன்.<br>• நட்டக்கழிவு குறிகாட்டிகள் காணப்படுமிடத்து, எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசு பாய்ச்சல்கள், கழிவீட்டு விகிதங்கள் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ள துணை மதிப்பீடு உள்ளடங்களாக முகாமைத்துவத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால |

அறவிடுகைகளின் நியாயத்தன்மையினை நான் மதிப்பிட்டேன், மேலும் எதிர்கால அறவிடுகைகளின் மதிப்பிடப்பட்ட முன்னைய தொகைகளுக்கு எதிராக உள்ளபடியான அறவிடுகைகளினை நான் ஒப்பிட்டேன்.

- கடன் நட்டத்தின் உயர் இடரொன்றுடன் வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் காணப்படுமிடத்து, நட்டக்கழிவு நிகழ்வொன்று ஏற்பட்டதற்கான மற்றும் அவ்வாறான மேலதிக நட்டக்கழிவின் முகாமைத்துவ மதிப்பீட்டிற்கு நியாயத்தன்மை காணப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட பிரதான கட்டளை விதிகளினை நான் மதிப்பிட்டேன்.

ஏனைய வாடிக்கையாளர்களிடம் இருந்தான கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளுக்கான நட்டக்கழிவிற்கான கூட்டு மதிப்பீடு.

- வங்கியின் மூல ஆவணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகளிலுள்ள தகவல் மற்றும் நட்டக்கழிவு படியினுடைய மீள் செயற்படுத்தப்பட்ட கணிப்பீடுகளுக்கான விபரங்களினை இணங்குவதன் மூலம் நட்டக்கழிவு கணிப்பீடுகளில் பயன்படுத்தப்பட்ட கடன்கள் மற்றும் பெற வேண்டியவைகளில் அடிப்படை தகவலின் முழுமையானதன்மை, தொடர்புடையதன்மை மற்றும் துல்லியத்தன்மையினை நான் பரீட்சித்தேன்.
- கடன் பொதிகளின் பல்வேறு வகை மீது அவர்களின் தீர்ப்புக்களில் முகாமைத்துவத்தினால், அவற்றுடன் பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய தரவு மற்றும் தகவல் மூலங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் பயன்படுத்தப்பட்ட பெரும்பாக பொருளியல் மற்றும் ஏனைய காரணிகளின் நியாயத்தன்மையை கூட நான் கருத்திற்கொண்டேன்.
- 20 ஆம் குறிப்பில் ஸ்தாபிக்கப்பட்டவாறு

வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய நிதிக்கூற்றுக்களின் போதுமானதன்மையினை நான் மதிப்பிட்டேன்.

- 4 ஆம் குறிப்பில் ஸ்தாபிக்கப்பட்டவாறு எஸ்எல்எப்ஆர்எஸ் 9 இன் பூர்வாங்க உள்வாங்கலின் தாக்கம் மீதான தொகுதி வெளிப்படுத்தலின் போதுமானதன்மையினை கூட நான் மதிப்பிட்டேன். இது மாற்றுதலின் அளவுசார் தாக்கத்தின் பரீட்சிப்பினை உள்ளடக்கியிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள்,

புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2018 இல் பொதுப்பேரேட்டுக்கும் பெறப்படாத சுவசக்தி மானிய அட்டவணைக்கும் இடையில் ரூபா. 4,956,106 வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டிருந்தது. | மீதி வேறுபாடானது பெறப்பட்ட மீள் நிதியிடல் மற்றும் கிளைகளினால் செய்யப்பட்ட ஏற்பாட்டினை குறிக்கின்றதுடன் வங்கியின் கடன் திணைக்களத்தின் ஆலோசனையுடன் இவ் விடயத்தை தீர்க்க முயற்சிக்கப்படும். | வேறுபாட்டினை இணக்கம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) ''அதட பொலிய'' திட்டத்தின் கீழ் நிலையான வைப்புக்களிற்கான வட்டியானது வைப்பு தொடக்கத்தில் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படுகின்றது. செலுத்தப்பட்ட வட்டியானது முன்கூட்டியே செலுத்தப்பட்ட வட்டி வருமானக்கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதுடன் மாதாந்த வட்டியானது முறைமையினால் தன்னியக்கமாக கணக்கிடப்படுகின்றது. | | நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது முன்செலுத்தப்பட்ட வட்டி வருமானக்கணக்கு மற்றும் வட்டி வருமானம் செலுத்த வேண்டிய கணக்கில் தொடர்புடைய நிலுவைகளை தீர்ப்பனவு செய்தல் அவசியமானது. |

| | | | |
|---|---|---|---|
| (அ) | இருப்பினும் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா. 2,725,087 தொகையான முன்கூட்டி செலுத்தப்பட்ட வட்டியானது செலுத்த வேண்டிய வட்டிக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. எனவே 31 திசெம்பர் 2018 இல் சொத்து மற்றும் பொறுப்பு ரூபா. 2,725,087 ஆல் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | முன்செலுத்தப்பட்ட வட்டி மீதிகளை உடனடியாக தீர்க்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ‘‘அதட பொலிய’’ வைப்பிற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா. 49,644,312 பெறுமதியான புதிதாக திறக்கப்பட்ட கணக்குகளின் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வட்டியானது ரூபா. 5,271,967 ஆக இருப்பினும் 31 திசெம்பர் 2018 இல் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வைப்பு வட்டி கணக்கின் மீதியானது ரூபா. 10,422,864 ஆக காணப்பட்டதுடன் ரூபா. 5,150,897 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ‘‘அதட பொலிய’’ வட்டி வீதத்தை விண்ணப்பிப்பதன் மூலம் புதுப்பித்தலின் போது அதட பொலி தயாரிப்பின் கீழ் வட்டி செலுத்தப்படாது தானியக்கமாக புதுப்பித்தல் இடம்பெற்றுள்ளது. இருப்பினும் அதட பொலி சுற்றறிக்கை அறிவுறுத்தல் அதற்கேற்ப திருத்தப்பட வேண்டும். | |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா. 112.2 தொகையான மீள்நிதியளிப்பு செலுத்த வேண்டிய மீதிகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது அந்த மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிலையாக காணப்பட்டுள்ளது. | இந்த நிலுவைகளில் பெரும்பாலானவை எம்பிவின் முறைமையிலிருந்து முக்கிய வங்கி முறைமைக்கு தரவு மாற்றும் செயற்பாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளதுடன் நீண்டகால நிலுவை தொகையை தீர்க்க அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் மேற்கூறிய விடயம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. | செலுத்த வேண்டிய நிலுவைகளை தீர்த்துக்கொண்ட பின் செயற்படாத மறு நிதியளிப்பு திட்டங்களை மூட தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2002 ஆம் ஆண்டு முதல் மகாவலி அதிகார சபையிடமிருந்து பெற்ற 2 நிதிகளின் வட்டி தொடர்ந்து அட்டுறுவாக காணப்பட்டிருந்த போதும், 31 திசெம்பர் 2018 வரை எந்தவொரு வட்டியையும் செலுத்த வங்கி நடவடிக்கை எடுக்கவில்லை. 31 திசெம்பர் 2018 இல் மொத்த அட்டுறு வட்டியானது ரூபா. 40,194,150 மற்றும் அதில் ரூபா. 36,764,636 ஆனது 31 திசெம்பர் 2017 இல் காணப்பட்டிருந்தது. ஓப்பந்தத்தின் பிரிவு 04 இன் பிரகாரம் விவசாயிகளின் அமைப்புக்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ஆண்டுக்கு 12 சதவீத வட்டி வருமானத்தை ஈட்ட வங்கிக்கு சந்தர்ப்பம் உண்டு. மகாவலி அதிகார சபையுடன் ஒப்புக்கொண்டபடி மேற்கூறிய நிதிகளை பயன்படுத்தியதற்கான எந்தவொரு சான்றும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | மகாவலி அதிகாரசபை இரண்டு கடன் திட்டங்களை அமுல்படுத்த ஒப்புக்கொண்டது. இருப்பினும் மகாவலி அதிகாரசபை பின்னர் இந்த திட்டங்களை இடைநிறுத்த தீர்மானித்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதிகளை திருப்பி தருமாறு கோரியது. எனவே இது தொடர்பாக சொத்து மற்றும் பொறுப்புக் குழுவிடமிருந்து அனுமதி கோரப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிறுவனங்களிற்கு மறு நிதியளிப்பு கடன் நிலுவைகளின் அட்டுறு வட்டியை செலுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (iii) | ‘‘யுஎன்டிபி – ஆர்யூஈடிஏ உத்தரவாத நிதியம்’’ இன் மீள் நிதியளிப்பு கடன்திட்டம் 2009 ஆம் ஆண்டில் ரூபா. 34,124,900 உடன் ஆரம்பிக்ககப்பபட்டிருந்ததுடன் மேற்கூறிய திட்டமானது திசெம்பர் 2013 இலிருந்து செயற்படுத்தப்படவில்லை. இருப்பினும் மேற்கூறிய நிதியை திருப்பிதர வங்கியால் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை, இது நாட்டின் எதிர்கால நன்மைகளை மட்டுப் படுத்தக்கூடியதாக அமையலாம். மேலும், | யுஎன்டிபி மற்றும் ஆர்யூஈடிஏ உடன் நடந்த கூட்டத்தில் யுஎன்டிபிக்கு நிதியம் மீளளிப்பு செய்ய தேவையில்லையென தீர்மானம் எடுக்கப்பட்டது. இருப்பினும் எழுத்து மூலமான சான்று கிடைக்கவில்லை. எனவே வங்கி நிதியையோ அல்லது வட்டியையோ யுஎன்டிபிக்கு திருப்பவில்லை. | மேலும் தாமதம் இல்லாமல் நிலுவைகளை தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அல்லது தொடர்புடைய தரப்பினர்களுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வரவும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையிலுள்ள வட்டி வீதத்தில் கூட்டு வட்டி முறையாக வட்டி மாதாந்தம் அட்டுறுவாக காணப்பட்டிருந்துத. எனவே 31 திசெம்பர் 2018 இல் வங்கி ரூபா. 11,003,743 மூலதனத்தை செலுத்தும் பொறுப்பையும் ரூபா. 23,417,695 செலுத்த வேண்டிய வட்டியையும் கொண்டிருக்கின்றது. | | |
| (iv) | கடன் உத்தரவாத இழப்பீட்டு மீதி, மத்திய வங்கியில் பெற்றுக் கொண்ட மற்றும் செலுத்தப்பட்ட கடன் உத்தரவாத தொகைகள் மற்றும் திரும்பப்பெற்ற மீள் கொடுப்பனவு தொகைகள் ஆகியவற்றின் தொகுப்பான விபரங்கள் கிடைக்கவில்லை. ரூபா. 25,371,311 கூட்டுமொத்த தொகை 2015 ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 2019 வரை சிஜி 1 மற்றும் சிஜி 2 இன் மீள்கொடுப்பனவாக திரும்ப பெறுவதற்கான செயற்பாடு நடைபெறாமைக்காக மத்தியவங்கிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | விடயம் நிறைவேற்று கடன் குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன் நிலைமை தவிர்க்க முடியாதது ஆகும். | பொருத்தமான இணக்கங்களை தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து மத்திய வங்கியால் வழங்கப்பட்ட பொருத்தமான வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்கவும். |
| (v) | 2016 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய ரூபா. 9,362,691 தொகையான தேசத்தை கட்டியெழுப்பும் வரி கணக்காய்வு திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் அனைத்து தொடர்புடைய வரிகளும் செலுத்தப் பட்டுள்ளதுடன் சில வரி மதிப்பீடுகளுக்கு எதிராக மேன்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதன்படி வங்கி தொடர்புடைய அனைத்து வரி செலுத்த வேண்டியவைகளையும் தீர்க்க கூடிய நிலையில் உள்ளது. | உரிய விகிதங்களுக்கு ஏற்ப உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு எந்த தாமதமும் இன்றி வரிகளை அனுப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | வங்கிச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் வழிகாட்டி இல 01 | வங்கி 31 திசெம்பர் 2018 இல் குறைந்தபட்ச மொத்த மூலதன போதுமான விகிதத்தை பேணியிருந்தது. இருப்பினும் முதல், இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளின் முடிவில் குறைந்தபட்ச மொத்த மூலதன போதுமான விகிதத்துடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது. | பசேல் III பிரமாணங்களின் படி மூலதன போதுமான தேவைகளை பராமரிக்க வங்கியால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | ஒழுங்குமுறை தேவைகளுடன் கண்டிப்பாக இணங்குவதை உறுதி செய்யவும். |
| (ii) | பெறுகை வழிகாட்டி குறிப்பு 2.1.1 மற்றும் பொது நிதி சுற்றறிக்கை பிஎப்/429(i) | பொதுநிதி பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதியை பெறாமல் வங்கி தனது சொந்தமாக விருத்தி செய்த கைநூலை பயன்படுத்தியுள்ளது. | 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டி பிரிவு 2.1.1 இன் பிரகாரம் தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்கு செயலாளர், அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 27 ஏப்ரல் 2016 அன்று வங்கியால் கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. 27 ஒக்டோபர் 2018 வரை வங்கியானது அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்ததுடன் அனுமதியானது தேசிய பெறுகை ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்திடம் அரசாங்க தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டது. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 1.8 முதிர்வு பகுப்பாய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2018 இல், மீதமுள்ள ஒப்பந்தம் சார்ந்த முதிர்வுகளினால் காணப்படும் நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களின் பகுப்பாய்வு வெளிப்படுத்துவது, மொத்த நிதி பொறுப்புக்கள் 3 – 12 மாதங்கள் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேலாக மொத்த நிதி சொத்துக்கள் மிக அதிகமாக இருப்பதாகவும் மற்றும் திரவத்தன்மை இடைவெளிகள் முறையே ரூபா. 16,427,792,596 மற்றும் ரூபா. 10,272,877,666 ஆகவும் காணப்பட்டது. | வங்கியின் மொத்த நிதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் முதிர்வு பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டது. இருப்பினும் திரவத்தன்மை நோக்கத்திற்காக வங்கியின் முதலீட்டு பட்டியலானது குறுங்கால முதிர்வுகளையும் உள்ளடக்கியுள்ளது. | வங்கியின் இடரை குறைப்பதற்காக நிதி சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களின் ஒப்பந்தம் சார்ந்த முதிர்வுகளுடன் பொருந்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 114 மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 83, (01.04.2018 முதல் நடைமுறைக்கு வந்தது) 31 ஜனவரி 2000 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல பிஎப்/பிஈ/06 மற்றும் 29 ஏப்ரல் 2016 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல பிஈடி 03/2016 இற்கு முரணாக வங்கியானது 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா. 191,479,007 தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரியினை (பிஏவைஈ) அதன் ஊழியர்களின் சார்பாக அந்தந்த ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு பதிலாக தனது சொந்த நிதியிலிருந்து செலுத்தியுள்ளது. மேலும் பிஈடி சுற்றறிக்கை இல பிஈடி 03/2016 இற்கு இணங்க பிஏவைஈ வரியினை ஊழியர்களின் உழைப்பிலிருந்து கழிக்கும் படி சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்திருந்தார். | ஆர்டிபி சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் ஊழியர்களின் பிஏவைஈ வரியானது வங்கியினால் செலுத்தப்பட்டதுடன் ஏனைய அரசுக்கு சொந்தமான வங்கிகளின் நடைமுறையே பின்பற்றப்படுகின்றது. மேலும் இந் நடைமுறை உள்நாட்டு இறைவரி சட்டத்தினால் தடைசெய்யப் பட்டிருக்கவில்லை. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக்கட்டண சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் படி வங்கியின் ஈஎஸ்சி ஆனது ரூபா. 130,353,053 ஆகும். இருப்பினும் வங்கி 2018 ஆம் ஆண்டிற்கான பொருளாதார சேவை கட்டணமாக ரூபா. 129,248,353 மட்டுமே செலுத்தியுள்ளதுடன் ஈஎஸ்சி செலவானது ரூபா. 1,104,700 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பொருளாதார சேவைக்கட்டணமானது ஒவ்வொரு வருடமும் 31 மார்ச் இல் முடிவடைந்த வரி மதிப்பீட்டு வருடத்தை கருத்தில் கொண்டு வங்கியால் செலுத்தப்படுகின்றதுடன் மேற்கூறிய வருடத்திற்காக ஈஎஸ்சி தொடர்பாக வரிக் கடன்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் வருடத்தின் முடிவான 31 திசெம்பரில் நிதி அறிக்கைகளை சரியாக தயாரிப்பதை உறுதி செய்யவும். |
| (iii) | வங்கியின் 2018 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா. 1,073,586,361 ஆக இருந்தது, எனவே 2013 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14 இன் பிரகாரம் மேற்கூறிய இலாபத்தை அடிப்படையாக கொண்டு வருடத்திற்கான பயிர் காப்புறுதி வரியானது ரூபா. 10,735,864 ஆகும். கடந்த ஆண்டின் ரூபா. 2,047,966 சீராக்கத்துடன் பயிர் காப்புறுதி வரி செலவானது ரூபா. 12,783,830 ஆக இருக்க வேண்டும். எனினும் பொதுப்பேரேட்டின் பிரகாரம் பயிர் காப்புறுதி வரி செலவானது ரூபா. 10,332,117 ஆக இருந்ததுடன் இலாபமானது ரூபா. 2,451,713 ஆல் கூட்டிக்காட்டப்பட்டதுடன் அதே தொகையால் பொறுப்புக்களானது குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | ஒப்புக்கொள்ளப்பட்டது. 23/08/2013 வெளியிடப்பட்ட அரசாங்க அறிவுறுத்தல் 1824/23 இன் படி ‘‘வருடாந்த கணக்குகளை முடித்த பின்னர் எழும் மேலதிக பொறுப்பு மதிப்பீட்டு ஆண்டின் செப்ரெம்பர் 30 இற்கு முன் செலுத்தப்பட வேண்டும்’’ என்று கூறுகின்றது. எனவே அந்த மேலதிக பொறுப்பினை 30 செப்ரெம்பர் அன்றோ அல்லது அதற்கு முன்னர் செலுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம். | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் வருடத்தின் முடிவான 31 திசெம்பரில் நிதி அறிக்கைகளை சரியாக தயாரிப்பதை உறுதி செய்யவும். |
| (iv) | நிதி அல்லாத சேவைகளுக்கான வற் | | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுடன் வருடத்தின் முடிவான 31 திசெம்பரில் நிதி அறிக்கைகளை சரியாக தயாரிப்பதை உறுதி செய்யவும். |
| (அ) | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு முரணாக 2018 ஆம் ஆண்டிற்குரிய நிதி அல்லாத சேவைகளுக்கான வற் கணிப்பிடலின் போது ஒக்டோபர் 2018 இலிருந்து திசெம்பர் 2018 வரையான காலத்திற்குரிய வழங்குனர் மீதான வற் ரூபா. 750,010 வற் செலவிற்கு கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒப்புக்கொள்ளப்பட்டது. இது பெப்ரவரி 2019 கொடுப்பனவு மேற்கொண்டபோது கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வரவு பெறுமதியான ரூபா. 29,686,822 ஆனது பொதுப்பேரேட்டில் செலுத்த வேண்டிய வற் கணக்கில் 2012 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதனால் வருடத்தின் பொறுப்பானது அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 30 ஏப்ரல் 2019 நடைபெற்ற ஏஎல்சிஓ கூட்டத்தின் போது மே 2019 முதல் தொடங்கி 8 மாதத்திற்குள் இந் நிலுவையை அழிப்பனவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. | |
| (v) | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிச்சேவைகளுக்கான வற் கணிப்பீடு.<br>2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு முரணாக; | | |
| (அ) | ரூபா. 55,768,289 தொகையான பிரயாணம் மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு வற் கணிப்பீட்டிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் ஆண்டிற்கான நிதிச்சேவைகள் மீதான வற் ரூபா. 6,860,215 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பிரயாணம் மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு தொகை ஊழியர்களின் உத்தியோகபூர்வ பயணங்களிற்கான பிரயாண செலவை திருப்பி செலுத்துவதை குறிக்கின்றதுடன் இது அலுவலக பணியாளர்கள் செலவாக கருதப்படவில்லை. | பிரயாணம் மற்றும் வாழ்வாதார கொடுப்பனவானது உண்மையான பற்றுச்சீட்டின் திரும்ப செலுத்தலை அடிப்படையாக கொள்ளவில்லையாதலால், அது நிதி வற் கணிப்பீட்டின் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து ரூபா. 7,295,193 தொகையான செலுத்த வேண்டிய வற் கணக்காய்வு திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அனைத்துப் பதிவுகளையும் பரிசீலித்த பின் தேவையான பதிவுகள் செலுத்த வேண்டிய வற் கணக்கிற்கு செய்யப்படுகின்றன. | எந்த தாமதமும் இன்றி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு வரிகளை செலுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (vi) | வருமான வரி 2018.<br>2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரி சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க இறைவரி சட்டத்திற்கு முரணாக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களிற்கான ரூபா. 150,208,431 தொகையானது மூலதன படி கொடுப்பனவுகளிற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருந்தது. பயண நோக்கங்களிற்காக | இந்த வாகனங்கள் கடன் அறவீட மற்றும் வைப்பு திரட்டல் போன்ற வங்கியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. எனவே, மூலதன படிகள் வருமான வரி கணிப்பீட்டில் கோரப்பட்டுள்ளன. | மேற்கோள் காட்டப்பட்ட வழிகாட்டுதலை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

பயன்படுத்தப்படும் வாகனங்களிற்கான மூலதன படி கொடுப்பனவுகள் கோரப்பட முடியாது. எனவே ரூபா. 136,920,626 தொகையான வாகனங்களிற்கான மூலதனப் படிகள் கோரப்படுதலானது அனுமதிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 2,103,081,891 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 2,190,725,745 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா. 87,643,854 அல்லது 4 சதவீதம் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. உயர்ந்த வட்டி கிரயம், உயர்ந்த ஆளணி செலவுகள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் தர நியமம் 09 இன் விண்ணப்பித்தலின் மேலான தாக்கம் என்பன வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதான வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா. 3,474 மில்லியன் அல்லது 20 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா. 7,445 அல்லது 6 சதவீதத்தினால் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது. வட்டி வீத மற்றும் முதலீட்டு காலத்தின் அதிகரிப்பு காரணமாக வைப்புக்கள் மீதான வட்டி வருமானம் ரூபா. 411 மில்லியன் அல்லது 492 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. வைப்புக்கள் மற்றும் ஆளணி செலவுகள் மீதான வட்டி செலவுகள் முறையே ரூபா. 1,689 மில்லியன் அல்லது 16 சதவீதம் மற்றும் ரூபா. 898 மில்லியன் அல்லது 18 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இலங்கை நிதி அறிக்கையிடல் தர நியமம் 09 இன் தாக்கம் காரணமாக நட்டக்கழிவுக் கட்டணங்கள் ரூபா. 966 மில்லியன் அல்லது 218 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

வங்கியின் மீளாய்வாண்டிற்கான சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்களின் மீது துறைசார் விகிதங்களுடன் ஒப்பீடு செய்து பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி விகிதமான 3.25 உடன் ஒப்பிடும் போது, 2018 ஆம் ஆண்டிற்கு உயர்ந்த தேறிய வட்டி எல்லையானது 6.88 சதவீதமாக அவதானிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டிற்கான சராசரி சொத்துக்களிலிருந்து உயர்ந்த வட்டி வருமானமான 14.36 சதவீதம் மற்றும் சராசரி சொத்துக்களிலிருந்து வட்டி செலவான 7.49 சதவீதம் சராசரி உரிமம் பெற்ற வங்கி விகிதமான முறையே 11.52 சதவீதம் மற்றும் 8.27 சதவீதத்துடன் ஒப்பிடும் போது அவதானிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களிடமிருந்து அதிக வட்டி விகிதங்களை அறவிடுவது மற்றும் அதிக கிரயமான நிலையான வைப்புக்களை நம்புவது ஆகியவை மேற்கூறியவற்றுக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

(ii) துறை விகிதமான 54.2 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டிற்கான ஊழியர்களின் செயற்பாட்டு செலவு 75.01 சதவீதமாக காணப்பட்டது.

(iii) மோசமான கடன் மதிப்பீடுகளும் பயனற்ற மற்றும் நிலைத்திருக்க முடியாத அறவீட்டு முயற்சிகள் காரணமாக முன்னைய ஆண்டு முடிவில் இருந்த 3.27 சதவீதத்தை விட 31 திசெம்பர் 2018 இல் என்பிஎல் விகிதத்தில் 5.4 சதவீதம் வரை குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் சொத்துக்களின் தரத்தில் பாதகமான போக்கு அவதானிக்கப்பட்டது. மேலும் 31 மே 2019 இல் வங்கியின் என்பிஎல் ஆனது 9.87 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

(iv) 31 திசெம்பர் 2018 இல் சொத்துக்கள் மீதான திரும்பல் மற்றும் உரிமை முதல் மீதான திரும்பல் என்பவை முறையே 0.62 சதவீதம் மற்றும் 7.30 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. உயர் என்பிஎல் விகிதம் மற்றும் உயர் ஊழியர் கிரயம் காரணமாக நட்டக்கழிவுக் கட்டணங்கள் குறைவான இலாபத்தன்மை மட்டத்திற்கும் லங்காபுத்திர அபிவிருத்தி வங்கியின் இணைவு உரிமை முதலின் அதிகரிப்பிற்கும் பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | குருவிட்ட கிளையின் கட்டடமானது 9 மாதங்கள் தாமதத்துடன் ஒப்பந்தக்காரரினால் வங்கிக்கு கையளிக்கப்பட்டது. எனவே, கிளையானது 2018 ஆம் ஆண்டிற்கு ரூபா. 1,248,000 கிரயத்தில் வாடகைக் கட்டடத்தில் பேணப்பட்டிருந்ததுடன் 19 திசெம்பர் 2017 இல் செலுத்தப்பட்ட ரூபா. 1,680,000 தொகையான வாடகை முற்பணம் 2018 ஆம் ஆண்டிற்குரிய ஓர் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல் ஆகும். மேலும் கட்டடத்தின் தாமதமான கையளிப்பினால் ஏற்பட்ட இழப்பின் அறவீடு தொடர்பாக எந்தவொரு வாசகமும் குத்தகை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | தாமதத்திற்கு காரணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கட்டிடத்தின் முன் மேற்கொள்ளப்பட்ட வடிகால் கட்டுமாணம் மற்றும் பிரதேசத்திற்கு ஏற்பட்ட வெள்ள பாதிப்பு ஆகும். | வங்கியின் நிதியை வினைத்திறனாக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | சபை அனுமதியானது இமடுவவில் கிளை கட்டுமாணத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2018 ஆம் ஆண்டு இறுதி வரை அது கட்டப்பட்டிருக்கவில்லை. | சம்மந்தப்பட்டதை தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வங்கியின் நிதியை வினைத்திறனாக பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

இருப்பினும், ரூபா. 4,726,697 (வரியுடன்) முற்பணம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 28 ஏப்ரல் 2017 இல் ரூபா. 126,921 சட்ட கட்டணம் மற்றும் முத்திரை வரிக்காக யுடிஏ இற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் கணக்காய்வு திகதி வரை குத்தகை ஒப்பந்தம் கிடைத்திருக்கவில்லை.

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கந்தற மற்றும் தெவிநுவர கிளைகளில் எல்அடகு உத்தியோகத்தராக கடமைகளை செய்யும் போது ஓர் ஊழியரினால் ரூபா. 7,580,500 மூலதன இழப்பு செய்யப்பட்டிருந்தது. 03 ஓகஸ்ட் 2015 ஆம் திகதிய ஆர்டிபி/எஸ்பி/ஜஎன்வி/ஏஎல்எஸ்/ ஜிஎம்/13/30 இலக்க ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் குற்றம் சாட்டப்பட்ட ஊழியரின் சேவை 12 ஓகஸ்ட் 2013 முதல் முடிவுறுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் வங்கிக்கு ஏற்பட்ட இழப்பின் அறவீடு தொடர்பாக மேற்குறிப்பிட்ட கட்டளையில் நடவடிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குற்றம் சாட்டப்பட்ட ஊழியர் பணி நீக்கம் செய்யப்பட்டதுடன் நட்டத்தை ஈடு செய்வதற்காக அவரின் பணிக்கொடை மற்றும் வங்கி மீதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ரூபா. 4,500,000 மூலதன இழப்பினை காப்புறுதி கோரிக்கை மூலமும் ரூபா. 797,282 இனை பிடித்து வைக்கப்பட்ட தொடர்புடைய ஊழியர்களின் உரகார கொடுப்பனவு மூலமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் சிஐடியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் குற்றம் சாட்டப்பட்ட ஊழியருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு மீதமுள்ள தொகை குற்றம் சாட்டப்பட்ட ஊழியரிடமிருந்து மீட்கப்பட முடியும். | வங்கிக்கு ஏற்பட்ட இழப்பீட்டின் அறவீடு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட ஊழியரின் தொடர்புடைய ஒழுக்காற்று கட்டளையில் நடவடிக்கை குறிப்பிடப்பட்டிருக் கவில்லை, எனவே வங்கிக்கு ஏற்பட்ட இழப்பினை அறவிட தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 16, 17 மற்றும் 18 ஏப்ரல் 2019 அன்று திறக்கப்பட்ட கணக்குகளுக்கு ஆண்டுக்கு 13.3 சதவீத சிறப்பு வட்டி விகிதத்தை வழங்குவதன் மூலம் ரூபா. 3 பில்லியன் (ஏறத்தாழ) தொகையான வைப்புக்களை குறைந்து செல்லும் சந்தை வட்டி விகிதத்துடன் வங்கி சேகரித்திருந்தது. | ஓர் ஆரோக்கியமான திரவத்தன்மை விகிதத்தை பராமரித்து வருவது முக்கியமானது மற்றும் வங்கியானது திரவத்தன்மை விகிதத்தை சட்டரீதியான தேவைகளுக்கு மேலாக பராமரித்ததுடன் இது கடந்த காலங்களிலும் கடுமையாக ஏற்ற இறக்கமாக இருந்தது. மேலும், திரவத்தன்மை குறைவிற்காக வங்கி நிலையான வைப்புக்களிற்கு சந்தை விகிதங்களை விட ஓர் சிறிய எல்லையை வைத்திருந்தது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்குழு (ஏஎல்சிஓ) 16 ஏப்ரல் 2019 சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு விகிதத்தில் சிறிய அதிகரிப்பை வழங்குவதன் மூலம் வைப்பு மேம்படுத்தல் ஒன்றினை செய்ய தீர்மானித்திருந்தது. மேலும் அவை முக்கியமாக ஒரு வருட முதிர்வு மற்றும் வங்கியின் வைப்புத் தளத்திற்கு சாதகமான பங்களிப்பை கொண்டிருக்கும் என்பதால் அதிக வைப்புக்களை ஈர்ப்பதற்காக பிராந்திய பொது முகாமையாளர்களால் செய்யப்பட்ட கோரிக்கைகள் காரணமாக அந்த வாரத்தின் அடுத்த இரண்டு வேலை நாட்களிற்கு நீடிக்கப்பட்டது. | சந்தை போக்கு மற்றும் ஒழுங்கு முறை அதிகாரத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் வங்கி நிதிகளை வினைத்திறனான முறையில் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | 31 திசெம்பர் 2018 இல் மொத்த வாடிக்கையாளர் வைப்புக்களிலிருந்து 63.6 சதவீதத்தை வங்கியின் நிலையான வைப்புக்கள் கொண்டிருந்ததுடன் நிலையான வைப்புக்கள் மீதான வட்டிச்செலவு வாடிக்கையாளர் வைப்புக்களின் வட்டிச்செலவிலும் 80 சதவீதத்தை விட அதிகமானதாகும். எனவே அதிக நிலையான வைப்புக்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது உயர் கிரயமான நிலையான வைப்புக்களில் தங்கியிருப்பதை மேலும் அதிகரிக்கும். | | |

**3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி 31 திசெம்பர் 2018 இல் ரூபா. 95,664,238 தொகையான நிலையான வைப்புக்களினை முக்கிய வங்கி முறைமைக்குள் பதியாமல் கைமுறையாக பராமரித்திருந்தது. | இது முன்னைய பிராந்திய வங்கிகளால் வழங்கப்பட்ட வைப்பு சான்றிதழ்களை குறிப்பதுடன் போதிய விபரங்கள் இல்லாமையினால் சிபிஎஸ் முறைமைக்குள் பதிவது கடினம். மேலும், வைப்புக்களை மூடுவதைவிட வேறு கொடுக்கல் வாங்கல்கள் இவ் வைப்புச் சான்றிதழ்களுக்கு இல்லை. | கணணி மூலம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் பராமரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

**3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) தலைவர் 01 மே 2018 இலிருந்து 31 ஓகஸ்ட் 2018 வரையான காலப்பகுதிக்கு பணியாற்றினார்.<br><br>(அ) நான்கு மாத காலப்பகுதிக்காக 680 லீற்றர் (170x4) எரிபொருளுக்கு உரிமையுள்ளதுடன் 2038.1 லீற்றர் எரிபொருளை பயன்படுத்தியுள்ளார். எனவே பிஈடி சுற்றறிக்கைகளிற்கு முரணாக 1358 லீற்றர் எரிபொருள் ரூபா. 183,250 கிரயத்தில் (ஏறத்தாழ) பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>(ஆ) யூலை முதல் செப்ரெம்பர் 2018 வரை 3 மாதங்களிற்கு ரூபா. 73,250 வாடகைக்கு வங்கி ஒரு குடியிருப்பை வழங்கியிருந்தது. இராஜினாமா காரணமாக ஒரு மாத அறிவிப்புக்கு பதிலாக வங்கி ஒரு மாத வாடகையை செலுத்தியிருந்தது. | இந்த விடயம் தொடர்பாக பொது முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடம் அனுமதி கோரி வங்கி 05 யூலை 2018 அன்று கடிதம் அனுப்பியுள்ளது. | எந்தவொரு அனுமதி கடிதமும் கிடைக்கவில்லை என்பதால் சபை தீர்மானத்தை பின்பற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தலைவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்காக, பொது முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதி பெற சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய அனுமதி கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | | |
| (ii) | 25 ஒக்டோபர் 2016 அன்றைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா. 500 மில்லியன் நிதியுடன் வட மேற்கு மாகாணத்தில் சவிய கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும், அமைச்சரவை தீர்மானத்திற்கு மாறாக மேற்கூறிய திட்டத்தை அரசாங்க வங்கியுடன் அமுல்படுத்துவதற்காக 10 மார்ச் 2017 அன்று வங்கி வயம்ப கூட்டுறவு சமூகத்துடன் மேலதிக ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டது. மேலும், 25 நவம்பர் 2016 ஆம் திகதிய அபிவிருத்தி நிதி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு மாறாக மேற்கூறிய ஒப்பந்தத்தின் மூலம் அமைச்சரவை தீர்மானத்தின் செலுத்த வங்கி ஒப்புக்கொண்டதுடன் ரூபா. 22,892,254 இனை வயம்ப அபிவிருத்தி கூட்டுறவு சமூகத்திற்கு 31 மார்ச் 2019 வரை செலுத்தியிருந்தது. | அமைச்சு மற்றும் அந்தந்த சங்கங்களுக்கும் இடையில் அந்தந்த அமைச்சின் அமைச்சர்கள் அளித்த அறிவுறுத்தல்களின் படி ஒப்பந்தம் செய்யப்பட்டது. இது தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் இதுவரை எங்களுக்கு அறிவிக்கப்படவில்லை ஆனால் இரண்டு ஒப்பந்தங்களுக்கான அமைச்சின் உத்தியோகத்தர்களின் இணக்கம் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அமைச்சர் 7 சதவீத வட்டி வீதத்தில் 5 சதவீதத்தை கூட்டுறவுக்கு வழங்குமாறு அறிவுறுத்தினார். | அமைச்சரவை தீர்மானம் மற்றும் சபை தீர்மானங்களுக்கு ஏற்ப கடன் திட்டங்களை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

### 3.6 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வங்கிக்கான சரக்கு கட்டுப்பாட்டு முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரிப்பிற்காக 24 நவம்பர் 2016 அன்று ரூபா. 1,550,000 பெறுமதியான ஒப்பந்தத்தில் ஏபிசி கம்பியூட்டர்ஸ் பிறைவேற் லிமிடெட் உடன் கையெழுத்திட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனை இல 04 மற்றும் செயற்திட்டத்தின் நேர திட்டத்தின்படி மேற்கூறிய செயற்திட்டத்தின் அனைத்து நிலைகளும் 81 வேலை நாட்களுக்குள் அதாவது 16 திசெம்பர் 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ரூபா. 930,000 தொகையான மூன்று முற்பண கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 6 மார்ச் 2019 வரை இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் மற்றும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொடுப்பனவு விதிமுறைகளின் பிரகாரம் வங்கி யுஏரி (பயனர் ஏற்றுக்கொள்ளல் சோதனை) வரை பணம் செலுத்தியுள்ளதுடன் முறைமை தற்போது நேரடி இயக்கத்தில் உள்ளது. பழுது நீக்குவதற்கான நிறுவனத்தின் ஆதரவு எதிர்பார்ப்பிற்கேற்ப இல்லாமையினால் மீதி கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. நேரடி இயக்கத்திற்கான செலுத்த வேண்டிய கொடுப்பனவு இன்னும் செய்யப்படவில்லை. நேரடி இயக்கம் தொடங்கப்பட்டதுடன் எந்த தாமதமும் இல்லாமல் வங்கி இந்த முறைமையை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியுள்ளது. இருப்பினும் ஒப்புக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப தரத்தின்படி கம்பனி பூர்த்தி செய்து கையளிக்க வேண்டும் என்பதுடன் இது ஒப்புக் கொள்ளப்பட்ட காலத்திற்குள் இறுதி செய்யப்பட வேண்டும். | வங்கியின் சரக்கு கட்டுப்பாட்டு முறைமையின் மென்பொருள் விருத்திக்கு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டிருந்தது. இருப்பினும், வங்கி முறைமையை கணணி உருப்படிகளை மட்டுமே நேரடி இயக்கத்தின் கீழ் பயன்படுத்துகின்றது. எனவே, கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் வினைத்திறனான முறையில் செயற்திட்டங்களினை அமுல்படுத்த எந்த தாமதமும் இன்றி தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | வங்கிக்கான மனித வள முகாமைத்துவ முறைமை மென் பொருள் விருத்திக்கான ஒப்பந்தம் 17 திசெம்பர் 2015 அன்று ரூபா. 11,250,000 பெறுமதிக்கு மைக்றோஇமேஜ் பிறைவேற் லிமிடெட் உடன் கையெழுத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனை இல 10.3 மற்றும் செயற்திட்டத்தின் நேர திட்டத்தின்படி 30 நவம்பர் 2016 அன்று முழு செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க | ஆர்டிபி இன் தனிப்பட்ட தேவைகளை எதிர்கொள்ள காலம் எடுக்கும் என்பதால் முதலில் ஒப்புக்கொண்ட காலக்கெடு யதார்த்தமானது அல்ல. இதன் விளைவாக வங்கி மற்றும் விற்பனையாளரால் வழங்கப்படும் வள ஆதரவை கருத்தில் கொண்டு நேரத்திற்கு நேரம் தொகுதிகளை ஒப்படைப்பதற்கு வங்கி விற்பனையாளருடன் ஒப்புக் கொண்டது. தற்போது ஒப்புக் கொண்ட காலக்கெடுவினுள் | ஒப்புக் கொண்டதன்படி செயற்திட்டம் முடிக்கப்படாததால் எந்த தாமதமும் இன்றி செயற்திட்டத்தை முடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| வேண்டும். ரூபா. 6,208,672 தொகையான மற்றும் மொத்த செயற்திட்ட பெறுமதியில் 55.19 சதவீத பதினொரு முற்கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 6 மார்ச் 2019 வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 27 மாத தாமதம் அவதானிக்கப்பட்டிருந்தது. | 5 தொகுதிகள் நேரடி இயக்கத்திலும் மற்றும் பிற 4 தொகுதிகள் நேரடி இயக்கத்திற்கு தயாராகவும் உள்ளது. திட்டக்குழுவுக்கு வழங்கப்பட்ட பணிச்சுமையை அகற்றும் பணியை விரைவுபடுத்துவதற்காக ஏற்கனவே நேரடி இயக்கத்தில் நடக்கும் தொகுதிகளின் பணிகளை மேற்கொள்ள மனித வள ஊழியர்களிடையே பொறுப்புக்களை ஏற்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பழுது நீக்கலின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.7 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 26 பெப்ரவரி 2018 அன்றைய தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை மற்றும் 05 மார்ச் 2018 நடைபெற்ற பெறுகை குழு கூட்டத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய டிஜிஎம்/எச்ஆர்/ஆர்டிபி/2018/002 பெறுகைக்காக மிக குறைந்த கேள்விதாரர் பரிந்துரைக்கப் பட்டதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தை மீள மதிப்பீடு செய்து எந்த ஏற்கக்கூடிய நியாயமும் இன்றி மிக குறைந்த கேள்விதாரரை நிராகரித்து இரண்டாவது குறைந்த கேள்விதாரரை தெரிவு செய்துள்ளது. | கேள்விகளின் முதலாவது மதிப்பீட்டு கட்டத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் மிக குறைந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டார். தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரின் கணிசமான பதிலளிக்க கூடிய தன்மையை கருத்தில் கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அறிக்கையை மறு பரிசீலனை செய்ய பெறுகைகுழு அறிவுறுத்தியதுடன் மிக குறைந்த கேள்விதாரரிடம் தெளிவுபடுத்தும் அறிக்கை பெறப்பட்டது. கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் சுத்தம் செய்தல் சேவை தொடர்பாக அனைத்து உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களை வழங்க வேண்டும் என்பதுடன் மிக குறைந்த கேள்வியாளரின் மேற்கோள் விலை மாதத்தின் போதான தொடர்ந்து சுத்தம் | தொடர்புடைய நிறைவேற்று பெறுகை குழு கூட்டஅறிக்கையின் பிரகாரம் தேர்ந்து எடுக்கப்பட்ட கேள்விதாரருக்கு நிதி துறை நிறுவனங்களின் முன்னைய அனுபவம் குறைவு என்பதையும் சேவை நிலை மற்றும் அனைத்து கேள்விதாரரின் மேற்கோள் தொகையையும் கருத்தில் கொண்டு மீள் பரிசீலனை செய்ய பெறுகை குழுவினால் முன் மொழியப்பட்டது. எனவே எந்தவொரு ஏற்கத்தக்க நியாயப்படுத்தல் இல்லாமல் மிக குறைந்த கேள்விதாரர் |

| | | | |
|---|---|---|---|
| | | செய்தலுக்கு போதுமானதாக இல்லை. மிக குறைந்த கேள்விதாரரை நிராகரிப்பதற்கு நிதி துறைகளின் முன்னைய அனுபவம் பிரதான காரணம் இல்லை என்பதுடன் மேற்கூறிய மிக குறைந்த கேள்விதாரர் வங்கியின் தேவையுடன் ஒப்பிடும் போது கேள்விக்கு கணிசமாக பதிலளிக்க முடியவில்லை. | நிராகரிக்கப் பட்டதும் இரண்டாவது மிக குறைந்த கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டதும் கணக்காய்விற்கு கேள்விக்குரியதாவதுடன் வெளிப்படையான நடைமுறை பெறுகை நடைமுறையில் வங்கியால் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் பதவிக்கு இரண்டு உத்தியோகத்தர்களை உயர்த்துவதற்கு சபையின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 31 திசெம்பர் 2017 இல் வங்கியின் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய பொது முகாமையாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 12 ஆகும். இருப்பினும் உண்மையான பதவியணி 13 ஆக அவதானிக்கப்பட்டது. | 31 திசெம்பர் 2017 இல் வங்கியின் சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர்கள் மற்றும் பிராந்திய பொது முகாமையாளர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 12 ஆகும். இருப்பினும் அத்திகதியில் 13 உத்தியோகத்தர்கள் அப்பதவியை கொண்டிருந்ததுடன் தற்போது அது சரி செய்யப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (ii) | பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுடன் பொருந்துமாறு பிராந்திய பொது முகாமையாளர்களின் மேற்கூறிய பதவிக்கான | பிராந்திய பொது முகாமையாளர்கள்/ சிரேஷ்ட உதவி பொது முகாமையாளர் பதவிக்கு தேவையான தகுதிகள் 2018/1590 சபை பத்திரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் | ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வின் போது வெளிப்படையான நடைமுறைகளை பயன்படுத்த தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான தகுதிகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் மாற்றப்பட்டிருந்தது. தேவையான தகுதிகளை அவ்வப்போது மாற்றுவதன் மூலம் சில உத்தியோகத்தர்களுக்கு சாதகத்தையும் மற்றவர்களுக்கு பாதகத்தையும் உண்டாக்கலாம். | மாற்றப்பட்டுள்ளது. வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கச் செய்வதற்காக தகுதிகள் திருத்தப்பட்டுள்ளன. | நடவடிக்கைகளை எடுக்கவும். |
| (iii) | 16 பெப்ரவரி 2018 ஆம் திகதிய அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கை நிர்வாக இல 2018/108, நிபந்தனை இல 2.3 இல் குறிப்பிட்டதன் பிரகாரம் இறுதி 5 வருடங்களுக்கான சம்பள ஏற்ற தேவைப்பாடை பூர்த்தி செய்யாததுடன், வழங்கப்பட்ட ஒழுக்காற்று கட்டளையின் படி பதவி ஏற்றங்களிற்கு கருத்தில் கொள்ளக்கூடாத உத்தியோகத்தர் ஒருவர் மேற்கூறிய பதவிக்கு பதவியேற்றப்பட்டிருந்தார். | தொடர்புடைய உத்தியோகத்தரின் செயற்றிறனை முகாமை மதிப்பிட்டதுடன் 2014 ஆம் ஆண்டிற்கான சம்பள ஏற்றத்தை விட சம்பவ திகதியிலிருந்து அவரது சம்பள ஏற்றத்தை வழங்கியது. திருத்திய ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் அவரது 2011 ஆம் ஆண்டிற்கான சம்பள ஏற்றமே இடைநிறுத்தப்பட வேண்டும் 2014 ஆம் ஆண்டிற்கான சம்பள ஏற்றம் அல்ல. ஒழுக்காற்று கட்டளை 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டமையால் இது தாமதமாகியுள்ளது. | சில ஊழியர்களுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இல்லாமல் ஒழுக்காற்று கட்டளைகளை பொருத்தமான முறையில் அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டிணைந்த திட்டத்தில் காட்டப்பட்டுள்ள திட்டமிடப்பட்ட வணிக நோக்கங்களை விட வங்கியின் உண்மையான செயற்றிறன் அதிகமாக இருந்தது. எனவே, 27 மார்ச் 2018 ஆம் திகதிய 2018/1616 இலக்க சபை பத்திரத்தின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் திருத்தப்பட்டுள்ளது. இருப்பினும், தற்போது இருக்கும் கூட்டிணைந்த திட்டம் 2020 ஆம் ஆண்டு வரை மட்டுமே எதிர்வு கூறுகின்றது. | 2020 ஆம் ஆண்டிற்கு பின் 5 வருடங்களுக்கான புதிய கூட்டிணைந்த திட்டம் விருத்தி செய்யப்படும். | கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க தேவையான நடவடிக்கைகளை எந்த தாமதமும் இன்றி எடுக்கவும். |